BRAMPTON

Media Release

உடனடி வெளியீட்டுக்காக

# கோவிட் -19 (COVID-19) தொற்று பரவுகிற இந்த அவசர நிலையின்போது மருத்துவம் பார்ப்பவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான ஆதரவினை ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் கோருகிறது

ப்ராம்ப்ட்டன், ON (ஏப்ரல் 8, 2020) – இன்றைய நகர் மன்ற கூட்டத்தின்போது, உள்ளூர் சுகாதாரப் பராமரிப்பு வழங்குபவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதில் உதவுவதற்காக ஒரு குறிப்பாணைக்கு ப்ராம்ப்ட்டன் நகர மன்றக் குழு ஒப்புதல் அளித்தது; அயல்நாட்டில் பயிற்சி பெற்ற மருத்துவர்கள் இந்த கோவிட் -19 (COVID-19) தொற்றுப்பரவல் காலத்தில், களத்தில் இறங்கி வேலை செய்வதற்காக, அவர்களுடைய வேண்டுகோளின் பேரில் அவர்களுக்கு ஆதரவளிப்பதன் மூலம் இந்த அதிகரிப்பு செய்யப்படலாம்.

பிரதேச அரசுக்கு மேயர் பேட்ரிக் ப்ரவுன் மற்றும் கவுன்சிலர் ஷெர்மெய்ன் வில்லியம்ஸ் ஆகியோர் எழுதிய கடிதத்திற்கு நகர் மன்றம் ஆமோதிப்பு செய்தது. இந்த நகர் மன்றத்தின் பிரேரணையை ஒன்ட்டேரியோ முழுவதிலுமாக இருக்கும் நகராட்சிகளுக்கும் பேரூராட்சிகளுக்கும் அனுப்பி, அந்தந்த உள்ளூர் ஆட்சியமைப்பிலிருந்து, இது போன்ற வேண்டுகோளுடன் கூடிய தங்கள் சொந்த கடிதங்களை ஒன்ட்டேரியோ பிரதேச சுகாதார அமைச்சருக்கும் ஒன் ட்டேரியோவின் பிரதமருக்கும் அனுப்பி வைப்பதற்காக பகிர்ந்துகொள்ளப்பட்டது.

அரசுப்பணியாளர்களுடன் களத்தில் முன் நின்று வேலை செய்வதர்காக திறமை மிக்கவர்களுக்கும் உதவுகின்ற தனது புதிய ஆன்லைன் வழிமுறை பற்றிய ஒன்ட்டேரியோ அரசின் நேற்றைய அறிவிப்பினை நகர் மன்றம் வரவேற்கிறது; கூடவே கோவிட் -19 (COVID-19) தொற்று பரவலுக்கு எதிராக இது ஒரு முக்கியமான நடவடிக்கை எனவும் அங்கீகரிக்கிறது.

மார்ச் 24 ஆம் தேதியன்று, நகர் மன்றத்தின் கலந்தாலோசிப்பின் பேரிலும், நகரின் அவசரகால மேலாண்மைக் குழுவின் பரிந்துரையின் பேரிலும், ப்ராம்ப்ட்டன் நகரில் ஒரு அவசர நிலையை மேயர் பேட்ரிக் ப்ரவுன் பிரகடனம் செய்தார்; இது நகரின் அவசரகால மேலாண்மை திட்டத்திற்கு ஏற்ப செய்யப்பட்டது. அப்போதிலிருந்து , இந்த நகரத்தின் நிர்வாகமானது சமுதாய மக்களின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பினைக் காப்பதற்காக முன்னெப்போதுமில்லாத மற்றும் விரைவான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

## Links

- மார்ச் 24, 2020 – கோவிட் – 19 தொற்று பரவலுக்கு எதிராக ப்ராம்ப்ட்டன் நகரம் அவசர நிலையை பிரகடனம் செய்திருக்கிறது (March 24, 2020 – City of Brampton declares State of Emergency in response to COVID-19)

- ஏப்ரல் 7, கோவிட் -19 தொற்று பரவலுக்கு எதிர்ச்செயலாக ப்ராம்ப்ட்டன் நகரின் புதுப்பித்த தகவல்கள் (April 7, 2020 – City of Brampton update on response to COVID-19)

**அறிஞர் கூற்றுக்கள்**

“ ப்ராம்ப்ட்டன் நகரிலும் பிரதேசம் முழுவதிலுமாகவும் அயல்நாட்டுக் கல்விகற்ற ஆயிரக்கணக்கான மருத்துவர்களும் செவிலியர்களும் உள்ளார்கள்; இவர்கள் எல்லோருமே கோவிட் -19 தொற்றுப்பரவலின் காரணமான அவசர நிலையில், களத்தில் இறங்கி ஆதரவளிக்க தயாராக உள்ளார்கள். ஒவ்வொரு நாளும் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை கூடிக்கொண்டே போவதால், இந்த மக்களின் திறமையை நாம் உபயோகிக்காமல் விட முடியாது – இது உயிர்களைக் காக்கும் விஷயமல்லவா!.”

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் மாநகரம்*

"இந்த பணிக்காக ப்ராம்ப்ட்டன் நகரம் முன்னணி தலைமை ஏற்றுள்ளது. இப்போது நாங்கள் ஒன்ட்டேரியோவில் இருக்கும் பிற நகரங்கள் மற்றும் மாநகரங்களையும் எங்களுடன் சேர அழைக்கிறோம். இந்த உலகளாவிய தொற்றுப் பரவலை எதிர்த்து போராடுவதற்காக ஒவ்வொரு நாளும் எங்களைச் சந்திக்கின்ற சுகாதாரப் பராமரிப்பு தொழில்தகைமையாளர்கள் பாராட்டுக்குரியவர்கள், ஆனால் அவர்களுக்கு நம்முடைய உதவி தேவை. தகுதி வாய்ந்த, அயல்நாட்டில் பயிற்சி பெற்ற மருத்துவர்கள் ஓரம் கட்டப்படாமல் முன்னணியில் சேர்க்கப்பட்டு பணியாற்ற அனுமதிப்பதன் மூல இந்த களப்பணியாளர்களுக்கு வேண்டிய ஆதரவை நாம் கொடுக்க வேண்டும்."

- *ஷெர்மெய்ன் வில்லியம்ஸ், நகர கவுன்சிலர், வார்டுகள்7 & 8 , ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
*905-874-3426 | Monika.Duggal@brampton.ca*